


சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் நேற்று (24.9.2024) இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நான் முதல்வன் குடிமைப் பணி தேர்வுகளுக்கான படிப்பகத்தை திறந்து வைத்து, நான் முதல்வன் போட்டித் தேர்வுகளுக்கான உண்டு உறைவிடப் பயிற்சியை தொடங்கி வைத்து, தமிழ்நாடு திறன் போட்டிகள், இந்திய திறன் போட்டிகள், நிரல் திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கி அவர்களுடன் குழு படம் எடுத்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, முன்னாள் படை வீரர் நலத்துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன், நான் முதல்வன் திட்டத்தின் முதன்மைச் செயல் அலுவலர் ஜெயபிரகாசன், திட்ட இயக்குநர் சுதாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் நேற்று (24.9.2024) இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நான் முதல்வன் குடிமைப் பணி தேர்வுகளுக்கான படிப்பகத்தை திறந்து வைத்து, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் போட்டித் தேர்வுகளுக்கான உண்டு உறைவிடப் பயிற்சி, முன்னாள் படைவீரர் நலத் துறையினருக்கான முதல் கட்ட திறன் பயிற்சி ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, முன்னாள் படை வீரர் நலத் துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன், நான் முதல்வன் திட்டத்தின் முதன்மைச் செயல் அலுவலர் ஜெயபிரகாசன், திட்ட இயக்குநர் சுதாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அதிகாரம் மிக்க பொறுப்புகளுக்கு தமிழர்கள் வருவதே

# நம் 'திராவிட மாடல்' அரசின் லட்சியம்!

### சென்னை விழாவில் – 'நான் முதல்வன்' திட்டப் பயனாளிகளுக்கு நிதி வழங்கி –

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை,செப்.25-

சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், `நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் யு.பி.எஸ்.சி., எஸ்.எஸ்.சி, ஆர்.ஆர்.பி, ஐ.பி.பி.எஸ் தேர்வுகளுக்குத் தயாராகும் இளைஞர்களுக்குக் கட்டணம் இல்லா விடுதி வசதி மற்றும் தமிழ்நாடு ஸ்கில்ஸ் ஹேக்கத்லான் போட்டிகளில் வென்றவர்களுக்குப் பரிசு தொகை வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.

இதில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புச் செயலாக்கப் பிரிவு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு மாணவர்களுக்கு உதவித் தொகையை வழங்கி, சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான, `நான் முதல்வன் திட்டத்தின்' கீழ், யு.பி.எஸ்.சி தேர்வுக்குத் தயாராகும், 1000 பேருக்கு 10 மாதங்களுக்கு மாதம் 7,500 ரூபாய் உதவித்தொகை வழங்குவது, குடிமைப் பணிகள் தேர்வு-ஸ்டாப் செலக்சன் கமிஷன்- ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம்- வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் தேர்வுகளுக்குத் தயாராகின்ற இளைஞர்களுக்குக் கட்டணமில்லா விடுதி வசதியைத் தொடங்கி வைப்பது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பில், முன்னாள் இராணுவ வீரர்களுக்கான, திறன் பயிற்சியைத் தொடங்கி வைப்பது,

தமிழ்நாடு ஸ்கில்ஸ் மற்றும் ஹேக்கத்தான் போட்டிகளில் வென்றவர்களுக்குப் பரிசுத் தொகையினை வழங்குவது, என இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த நிகழ்ச்சிக்கு, தமிழ்நாட்டின் பல்வேறு திசைகளில் இருந்து வந்திருக்கும் நாளைய ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.ஆர்.எஸ் அதிகாரிகள், நாளைய ரயில்வே – வங்கி அதிகாரிகளான, உங்களை எல்லாம், சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், உற்சாகமும், பெருமையும் அடைகிறேன்.

**எதிர்கொள்ள நம்பிக்கை**

எந்த ஒரு தேர்வையும், எதிர்கொள்ள வேண்டுமென்றால், நம் மீது, நமக்கு நம்பிக்கை வேண்டும். குறிப்பாக, போட்டித்தேர்வுக்குத் தயாராக வேண்டும் என்றால் நம்பிக்கை மட்டும் போதாது, கூடுதலாக, தன்னம்பிக்கையும் வேண்டும். அப்படித் தன்னம்பிக்கையோடு போட்டித்தேர்வுக்கு விண்ணப்பித்து, விடாமுயற்சியோடு தயாராகி வரும், நீங்கள் ஒவ்வொருவருமே, அரசின் பாராட்டுக்குரியவர்கள்.

நாட்டுக்காக உழைத்த முன்னாள் படை வீரர்களும் வந்து இருக்கிறீர்கள். தமிழ்நாட்டின் 10 இடங்களில் பல்வேறு திறன் பயிற்சிகளைப் பெற இருக்கும் உங்களுக்கும் என் வாழ்த்துகள். என் பாராட்டுகள்.

`நான் முதல்வன்' திட்டம் என்ற குடையின் கீழ், ஏராளமான விஷயங்களை, நம் திராவிட மாடல் அரசு, செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. பள்ளிகளில், உயர்கல்விக்கு வழிகாட்டும் வகுப்புகள், கல்லூரிகளில், திறன் சார்ந்த பயிற்சிகள், வேலைக்குச் செல்வோருக்கு, திறனை வளர்ப்பதற்கான சாப்ட் ஸ்கில்ஸ் டிரைனிங் (Soft Skills Training) இப்படிப் பல திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது இந்த நான் முதல்வன் திட்டம்.

**ஒரே இலக்கு**

`நான் முதல்வன்' திட்டத்தைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டின் ஒவ்வொரு இளைஞரையும், அவரவர் துறையில் முதல்வர்களாக உருவாக்கணும். அதுதான் இந்தத் திட்டத்தின் ஒரே நோக்கம், முதலமைச்சரின் ஒரே இலக்கு. இந்தத் திட்டம் தொடங்கிய 2 வருடத்தில், இதுவரைக்கும் 30 லட்சம் மாணவர்கள், பயன்பெற்று இருக்கிறார்கள். லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு, ஆண்டுக்கு 2 லட்சம் முதல் 60 லட்சம் ரூபாய் வரை ஊதியத்தில், வேலைவாய்ப்பு கிடைத்து இருக்கிறது.



பேரறிஞர் அண்ணா பள்ளிக்கல்வியைத் தரம் உயர்த்தினார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், உயர் கல்வி, எல்லோருக்கும் சென்று சேர, திட்டங்களைத் தந்தார். இதன் அடுத்தகட்டமாக, நம் முதலமைச்சர் அவர்கள், திறன்பயிற்சி, வேலை வாய்ப்பு என்று தமிழ்நாட்டு இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றி வருகிறார்.

ஒரு 30 வருடத்திற்கு முன், தமிழ்நாட்டில் இருந்து நிறைய இளைஞர்கள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.ஆர்.எஸ்., ஐ.எஃப்.எஸ் மாதிரியான அதிகாரமிக்க ஒன்றிய அரசுப் பணிகளுக்கு நிறைய பேர் தேர்வாகிச் சென்று கொண்டிருந்தார்கள். ஆனால், இந்தப் போக்கு, சில வருடங்களுக்கு முன்பு, சற்று குறைய ஆரம்பித்தது, உங்களுக்கே தெரியும்.

**மாதம் ரூ. 7 ஆயிரத்து 500**

இந்த இடைவெளியைப் போக்க வேண்டும் என்றுதான், நம் முதலமைச்சர் அவர்கள், `நான் முதல்வன்' போட்டித்தேர்வுகள் பிரிவை, சென்றாண்டு தொடங்கி வைத்தார்கள்.

அதுமட்டுமில்லை, போட்டித் தேர்வுக்குத் தயாராகும் இளைஞர்களுக்கு, `உதவித்தொகை வழக்கப்படும்', என்று அறிவித்தார்கள். அதன்படி, அரசு நடத்துகின்ற தேர்ச்சித் தேர்வில் வெற்றி பெற்றால், அவர்களில் 1000 பேருக்கு 10 மாதங்களுக்கு மாதம் 7 ஆயிரத்து 500 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது.


சென்ற ஆண்டு யு.பி.எஸ்.சி முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற 453 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம், மொத்தம் 1 கோடியே 13 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. நான் முதல்வன் போட்டித்தேர்வுகள் பிரிவு தொடங்கப்படுவதற்கு, முந்தைய ஆண்டு, தமிழ்நாட்டிலிருந்து மொத்தமே 36 பேர்தான் யு.பி.எஸ்.சி தேர்வில் வென்று இருந்தார்கள். ஆனால், இந்தத் திட்டம் வந்த பிறகு, முதல் ஆண்டிலேயே, தமிழ்நாட்டிலிருந்து 47 மாணவர்கள் யு.பி.எஸ்.சி தேர்வில் வென்று இருக்கிறார்கள். இந்தத் திட்டம், வருவதற்கு முந்தைய ஆண்டு, யு.பி.எஸ்.சி தேர்வில் முதல் 100 பேர் பட்டியிலில் தமிழ்நாட்டிலிருந்து ஒருவர் கூட தேர்வாகவில்லை. ஆனால், இத்திட்டம் வந்த பிறகு, சென்ற ஆண்டு அகில இந்திய அளவில் முதல் 100 டாப்பர்ஸ் பட்டியலில், தமிழ்நாட்டு இளைஞர்கள் 6 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த 6 பேருமே நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயன் அடைந்தவர்கள்.

**திட்டத்தின் வெற்றி**

அதுமட்டுமல்ல, நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவு தொடங்கப்படும் முன் 2022-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிலிருந்து, 585 பேர் யு.பி.எஸ்.சி முதல் நிலைத் தேர்வை கிளியர் செய்து இருந்தார்கள். ஆனால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திய பிறகு, 632 பேர், யு.பி.எஸ்.சி முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று இருக்கிறார்கள். அதில், 278 இளைஞர்கள், நான் முதல்வன் திட்டத்தால், நேரடியாகப் பயன்பெற்றவர்கள் என்பதை, இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதுதான், இந்தத் திட்டத்தின் வெற்றி.

இங்கே ஊக்கத்தொகை பெற்றுள்ள நீங்கள் ஒவ்வொருவரும் நாளைக்கு ஐ.ஏ.எஸ்-ஆக, ஐ.பி.எஸ்-ஆக, மற்ற அதிகாரமிக்க பணிகளுக்குத் தேர்வாக வேண்டும் என்று

**தமிழ்நாட்டின் ஒவ்வொரு இளைஞரையும், அவரவர் துறையில் முதல்வர்களாக உருவாக்கணும். அதுதான் இந்தத் திட்டத்தின் ஒரே நோக்கம், முதலமைச்சரின் ஒரே இலக்கு.**



என் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

போட்டித்தேர்வு என்றாலே, லட்சக்கணக்கான இளைஞர்கள் விண்ணப்பிக்கிறார்கள். என்னதான் கடினமாக உழைத்தாலும், மிக சிலருக்குதான் அரசுப்பணி கிடைக்கிறது. திறமை இருந்தாலும், சரியான வழிகாட்டலும், பொருளாதாரமும் இல்லாத காரணத்தால், பலரால் தொடர்ந்து தேர்வுக்குத் தயார் ஆக முடியவில்லை.

**கேள்விகள்– தடைகள்**

சாதாரண குடும்பப் பின்னணியில் இருந்து வரும், பல ஆயிரம் இளைஞர்கள் `நம்மால் யு.பி.எஸ்.சி. எல்லாம் கிளியர் பண்ண முடியுமா? ஒரு முறை வாய்ப்பைத் தவற விட்டால், அடுத்த முயற்சிக்கு நம்மை தயார்படுத்திக்கொள்ள முடியுமா? சென்னை மாதிரியான மாநகரங்களில் தங்கிப் படிக்க வேண்டும் என்றால் நிறைய செலவு ஆகுமே? என்று, பல்வேறு கேள்விகள்-தடைகளைப் பற்றி நீங்கள் சிந்தித்து இருப்பீர்கள்.

இதற்கு தீர்வு காணும்விதமாக, நம் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டலின் அடிப்படையில், போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லாப் படிப்புக்கூட வசதி மற்றும் உறைவிடப் பயிற்சித் திட்டத்தை இன்று தொடங்கி வைக்கிறோம்.

யு.பி.எஸ்.சி போட்டித் தேர்வுப் பயிற்சிக்கு பெயர் போன சென்னை அண்ணா நகரில், இதற்காக ஆயிரம் மாணவர்கள் அமர்ந்து படிக்கக்கூடிய ஒரு படிப்புக் கூடம் இன்று திறக்கப்பட்டு இருக்கிறது.

இதன் மூலம் யு.பி.எஸ்.சி முதல்நிலைத் தேர்வை கிளியர் செய்கின்ற 1,000 மாணவர்கள், கட்டணமின்றி அந்தப் படிப்புக் கூடத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். சென்னை, கோவை, மதுரை, மண்டலங்களில், எஸ்.எஸ்.சி, ஆர்.ஆர்.பி, ஐ.பி.பி.எஸ் பணிகளுக்குத் தயாராகும் இளைஞர்களுக்கு, கட்டணமில்லா விடுதி வசதியை, நம் அரசு ஏற்படுத்தியுள்ளது.

**கனவு வெல்லட்டும்**

சென்னை காரப்பாக்கம், ஸ்ரீவில்லிப்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் 3 தனியார் பொறியியல் கல்லூரிகளில், போட்டித் தேர்வை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு, கட்டணமில்லா விடுதி வசதியும் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களை எல்லாம் நம் முதலமைச்சர் அவர்கள், உங்கள் பெற்றோர் ஸ்தானத்தில் இருந்து யோசித்து செயல்படுத்தியுள்ளார்கள். இதனை நீங்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்றிய அரசுப் பணியில் உள்ள உங்கள் கனவு வெல்லட்டும்.

தமிழர்கள் அதிகளவில் அதிகார மிக்க பொறுப்புகளுக்கு வர வேண்டும் எனும் நம் திராவிட மாடல் அரசின் லட்சியத்தை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நம் தமிழ்நாடு முதலமைச்சர், அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்றாண்டு தமிழ்நாடு திறன் போட்டிகளைத் தொடங்கி வைத்தோம். மாநில அளவில் வெற்றி பெற்ற 87 பேர் தேசிய அளவில் நடைபெற்ற `இந்தியா ஸ்கில்ஸ்' போட்டியில் பங்கேற்றனர்.

அந்தத் தேசிய அளவிலான போட்டிகளில் 6 தங்கப்பதக்கம்-8 வெள்ளிப்பதக்கம் - 8 வெண்கலப் பதக்கம், 9 சிறப்புப் பதக்கம் என தமிழ்நாட்டு இளைஞர்கள் பதக்கங்களைக் குவித்து இருக்கிறார்கள்.

**இந்தியத் திறன் போட்டிகள்**

2021-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியத் திறன் போட்டிகளில் தமிழ்நாடு இந்திய அளவில் 10-வது இடத்தில் இருந்தது. இந்த ஆண்டு 10-வது இடத்திலிருந்து 3-வது இடத்திற்கு வந்திருக்கிறது. அதற்கும் இந்த நேரத்தில் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களின் திறமையை அங்கீகரிக்கும் விதமாக, தங்கப் பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.1 லட்சம், வெள்ளிப் பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.50 ஆயிரம், வெண்கலப் பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.30 ஆயிரம், சிறப்புப் பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.25 ஆயிரம், மற்றும் இதர பங்கேற்பாளர்களுக்கு ரூ.20 ஆயிரம் என்று ரொக்கப் பரிசுகளை இங்கே வழங்கியிருக்கிறோம்.

மேலும் தமிழ்நாடு ஹேக்கத்தான் போட்டிகளை நம் துறை சார்பாக நடத்தினோம். அதில் பல்வேறு மாவட்டங்களில் பெறப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தொழில்நுட்ப உதவியோடு, புதுமையானதாக தீர்வினை காணும் வகையில், பல்வேறு படைப்புகளை இங்கு தந்திருக்கிறீர்கள்.

**சிறந்த உதாரணம்**

தொழில்துறை வல்லுநர்கள் மற்றும் ஸ்டார்ட் அப் டி.என். அலுவலர்கள், முதலீட்டாளர்கள் அடங்கிய தேர்வுக்குழுவின் மூலம், அந்த படைப்புகள் ஆய்வு செய்யப்பட்டன. அதன், அடிப்படையில் சிறந்த 50 படைப்புகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை இங்கே வழங்கப்படுகிறது. இந்த முன்னெடுப்புகள், பரிசுத்தொகைகள் எல்லாம், நம் அரசு, இளைஞர்களைத் கைதூக்கிவிட எந்த அளவுக்கு முனைப்போடு செயல்படுகிறது என்பதற்கு சிறந்த உதாரணம். ஆகவே, தமிழ்நாட்டு இளைஞர்கள் எதைப் பற்றியும் யோசிக்காதீர்கள். உங்கள் திறமைக்குச் சரியான களம் அமைத்துக் கொடுக்கவும், கரம்பிடித்து அழைத்துச் செல்லவும் நம் முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். நம் திராவிட மாடல் அரசு இருக்கிறது. எனவே முன்னேறிச் செல்லுங்கள். வெற்றி உங்களுக்கே, என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் செயலாளர் மருத்துவர் டேரஸ் அகமது ஐ.ஏ.எஸ்., முன்னாள் படை வீரர்கள் நலத்துறை இயக்குநர் விஷ்ணுசந்திரன் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் இன்னசென்ட் திவ்யா ஐ.ஏ.எஸ்., நான் முதல்வன் திட்ட முதன்மைச் செயல் அலுவலர் டாக்டர்.ஜெயப்பிரகாஷ், போட்டித் தேர்வுகள் பிரிவு இயக்குநர் சுதாகரன், முன்னாள் படைவீரர்கள், மாணவர்கள், உள்பட பலரும் கலந்துகொண்டனர்.